செ.வெ.எண்.58 நாள்.22.12.2017.

திருநெல்வேலி பாளையங்கோட்டை செல்வி மஹாலில் சிறு தொழில் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் நெல்லை உத்சவ் கிராப்ட் கண்காட்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்தார்.

-------

திருநெல்வேலி பாளையங்கோட்டை செல்வி மஹாலில் சிறு தொழில் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் நெல்லை உத்சவ் கிராப்ட் கண்காட்சி இன்று (22.12.2017) முதல் 25.12.2017 வரை நடைபெறுகிறது. இக்கண்காட்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்து, பார்வையிட்டார்.

சிறு தொழில் மேம்பாட்டு நிறுவனம் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் மத்திய, மாநில அரசு நிறுவனங்களின் செயல் திறன்மிக்க ஒத்துழைப்புடன் நிறுவப்பட்ட நிறுவனமாகும். இதில், மத்திய அரசின் தேசிய சிறு தொழில்கள் மேம்பாட்டுக் கழகம், மாநில அரசின் சிறு தொழில் மேம்பாட்டுக் கழகம் அங்கம் வகிக்கிறது. சிறு தொழில் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் 68 இடங்களில் கண்காட்சி நடத்தப்பட்டுள்ளது. திருநெல்வேலியில், முதன்முறையாக பாளையங்கோட்டை செல்வி மஹாலில் இன்று முதல் 25.12.2017 வரை 4 தினங்கள் நடைபெறுகிறது. தினசரி காலை 10.30 முதல் இரவு 8.30 மணி வரை கண்காட்சியினை பொதுமக்கள் கண்டு களித்திடலாம். இக்கண்காட்சியில் கைத்தறி பட்டுப்புடவைகள், காட்டன் புடவைகள், பெயிண்டிங் ஓவியங்கள், கைவினைப் பொருட்கள், செயற்கை ஆபாரணங்கள், பனை ஓலையால் தயாரிக்கப்பட்ட பொருட்கள் உள்பட பல்வேறு பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. உற்பத்தியாளர்கள் தங்களின் பொருட்களை நேரடியாக சலுகை விலையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்வது கண்காட்சியின் சிறப்பு அம்சமாகும்.

இந்நிகழ்ச்சியில், திருநெல்வேலி நபார்டு வங்கி மாவட்ட வளர்ச்சி மேலாளர் திருமதி.சலீமா, சிறு தொழில் மேம்பாட்டு நிறுவன பொது மேலாளர் திரு.பழனிவேல் முருகன் மற்றும் அலுவலர்கள், சிறு தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.